# புனிதர்கள் பேதுரு, பவுல் - திருத்தூதர்கள் பெருவிழா

திருவழிப்பாட்டு ஆண்டு A (29-06-2014)

## திருப்பலி முன்னுரை

அன்புமிக்க சகோதர சகோதரிகளே! மெசியாவும், வாழும் கடவுளின் மகனுமாகிய இயேசுவின் இனிய நாமத்தில் நல்வாழ்த்துக்கள். இன்று நாம் புனிதர்கள் பேதுரு, பவுல் - திருத்தூதர்கள் பெருவிழாவை கொண்டாடி மகிழ்கின்றோம். புனித பேதுரு, புனித பவுல் இருவருமே இரு துருவங்களாக, அதே வேளையில் திருச்சபையின் சரிநிகர் வணக்கம் பெறும் இரு தூண்களாகத் திகழ்வதை உணர்ந்து, வியந்து இறைவனைப் போற்றுவோம்.

இறைவனுடைய ஞானமும் அறிவும் ஆழமானவை, அவருடைய தீர்ப்புகள் அறிவுக்கு எட்டாதவை, அவருடைய செயல்முறைகள் ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டவை, ஆண்டவரின் மனத்தை யாருமே அறிந்துகொள்ள முடியாது, அவருக்கு யாருமே அறிவுரையாளராய் இருக்க வேண்டிய அவசியமும் இல்லை என்னும் ஆழமான உண்மைகள் இன்று நமக்குச் செய்தியாகத் தரப்படுகின்றன. திருச்சபை என்கிற கட்டிடத்தில் நாம் ஒவ்வொருவருமே விசுவாசத்தின் கட்டியெழுப்பும் கற்களாக இருக்கிறோம். நாம் ஒவ்வொருவரும் விசுவாசத்தில் உறுதியாக இருந்து, இறையரசு என்கிற கட்டிடத்தை இந்த மண்ணில் கட்டியெழுப்ப உறுதி கொள்வோம். இயேசு எனக்கு யார்? என்று நமக்குள்ளாக கேட்டுப்பார்ப்போம். அவர் நமக்கு சொல்வதை வாழ்வாக்குவோம். இயேசு நாம் விரும்புகிற உறவாக இருக்க விரும்புகிறவர். அந்த உறவாக இயேசுவை ஏற்றுக்கொண்டு மகிழ்வோடு வாழ்வோம். நன்றியுணர்வோடு தொடரும் பலியில் பங்கேற்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

**"இந்தப் பாறையின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாயில்கள் அதன்மேல் வெற்றிகொள்ளா" என்று மொழிந்த கடவுளின் மகனான இயேசுவே,**

எம் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், துறவிகள், அனைவருக்காகவும் மன்றாடுகின்றோம்: தூய ஆவியின் நிறை வல்லமையால் அவர்களை நிரப்பி, கிறிஸ்துவின் திருவுடலாகிய நற்கருணை குறித்துக்காட்டும் அன்பு, ஒற்றுமை, அன்பிய சமூக வாழ்வு ஆகியவற்றை அர்த்தமுள்ள விதத்திலே வாழுவதற்கு வேண்டிய சக்தியையும், ஆற்றலையும் அவர்களுக்கு அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**வாழும் கடவுளின் மகனான இயேசுவே,**

நாங்கள் உம்மைப் புகழ்ந்து போற்றுகிறோம். உம்மை ஆண்டவராகவும், இறைமகனாகவும் அறிக்கையிடும் பேறுபெற்றவர்களாக எங்களையும் மாற்றினீரே. உமக்கு நன்றி. எங்கள் விசுவாச அறிக்கை செயல் வடிவில் மாற்றம் பெற அருள்தாரும். இந்த நாள் முழுதும் எனது ஒவ்வொரு செயலாலும் உம்மை என் ஆண்டவராக அறிக்கை இட்டு வாழ உதவ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**உமது வார்த்தையால் எம்மைக் குணப்படுத்தும் தந்தையே இறைவா!**

பல்வேறு நோய்களினாலும், கவலைகளினாலும் பாதிக்கப்பட்டு வேதனையோடு வாழ்ந்து கொண்டிருக்கும் அனைவர் மீதும் மனமிரங்கி, அவர்கள் உடல் நலமும், மனநலமும் பெற்று மகிழ்ந்திட அருள்கூர்ந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நீதியை நிலைநாட்டும் இறைவா,**

உம்முடைய பிள்ளைகளாகிய நாம் அனைவரும் உமது திருமகனாம் இயேசுவின் திருவுடலாகிய நற்கருணைக்குரிய மாண்பையும் மதிப்பையும் உணர்ந்து வாழவும் இறைவார்த்தையாலும் நற்கருணையாலும் ஊட்டம் பெற்று உமது சாட்சிகளாக வாழ அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**ஆண்டவராகிய இயேசுவே,**

உம்மைப் போற்றுகிறோம். இருவேறு துருவங்களாய் இருந்த பேதுருவையும், பவுலையும் உமது திருத்தூதர்களாக அழைத்து, பெருமைப்படுத்தினீரே, உமக்கு நன்றி. அவர்களைப் போல நாங்களும் உமது பெருமைமிகு சாட்சிகளாக வாழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**கருணையும் இரக்கமும் நிறைந்த தந்தையே!**

*நோயினால் வாடுவோர், தனிமையில் இருப்போர், கவலையினாலும் துன்பங்களினாலும் கலங்குவோர், தேவையில் உழல்வோர், அடிமைத்தனத்துள் வாழ்வோர் அனைவரையும் உமது கருணையினாலும், இரக்கத்தினாலும் நிறைத்து அவர்கள் அனைவருக்கும் ஆறுதலையும், நிம்மதியையும் அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

**நலிந்தோரைக் கண்ணோக்குகின்ற தந்தையே!**

*உலகில் பல்வேறு சவால்களுக்குள்ளும், துன்பங்களுக்குள்ளும் அகப்பட்டு கண்ணீரோடும், கவலையோடும் வாடிக்கொண்டிருக்கும் அனைவர் மீதும் மனமிரங்கி, அவர்கள் அமைதியோடும், மகிழ்வோடும் வாழ்வதற்கு வேண்டிய அருளை அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*